Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - ௬௭] யாழ்ப்பாணம்:- மன்மத ௵ ஆடி மீ ௧௩ உ வெள்ளிக்கிழமை (29 JULY. 1955) [இல - ௧௭]

## சைவ வாழ்வுக்கு வழி வகுத்தார்

## வித்தகர் சிவபாத சுந்தரனார்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் அவர்களின் பின் யாழ்ப்பாணத்தில் சைவப்பயிரை வளர்த்த பெரியார்களுள் காலஞ்சென்ற சைவப் பெரியார் திரு சு சிவபாதசுந்தரம் அவர்கள் தலைசிறந்து விளங்குகிறார்கள். ஆறுமுக நாவலர் பெருமான் செய்த செயற்கரிய சைவப்பணியைத் தொடர்ந்து செய்த பெருந்தகையாளர் திரு. சிவபாதசுந்தரம் அவர்கள் தமது தூய வாழ்க்கையாலும், சிறந்த பக்தியினாலும், ஒப்பற்ற தியாகத்தினாலும், தாம் எழுதிய அரிய நூல்களினாலும், பொருள்பொதிந்த சொற்பொழிவுகளினாலும்ஈழநாட்டில் மாத்திரமல்ல தாய் நாடாகிய இந்தியாவிலும் தமது மங்காத புகழை இப்பெரியார் நிலைநாட்டியுள்ளார். நாவலர் பெருமான் அன்னியராட்சியினாலும், பரசமயத்தவர்களின் சூழ்ச்சிகளினாலும் கட்டுண்டு மயங்கியிருந்த மக்களின் மனதைத் தட்டியெழுப்பி மக்களின் உள்ளத்தில் ஒரு புது உணர்ச்சியை உண்டாக்கியருளினார். அங்ஙனம் அப்பெரியாரால் தட்டியெழுப்பப்பட்ட உணர்ச்சியை, உண்டாக்கிய சைவப் பயிரை தண்ணீர் வார்த்து வளர்த்தவர் திரு. சிவபாத சுந்தரம் அவர்கள் தான் என்றால் யார்தான் இவ்வுண்மையை மறுக்க வல்லார். 4-ம் வகுப்புத் தொடக்கம் எஸ். எஸ். ஸி. வகுப்பு ஈறாகவுள்ள எல்லாச் சைவ மாணவர்களுக்கும் பயன்படும்படி அவர் நூல்கள் எழுதியுள்ளார் முதன் முதல் மாணவர்களுக்கென்ச் சமய நூல்கள் எழுதிய பெருமை திரு. சிவபாதசுந்தரம் அவர்களுக்கே உரியது. ஆகையால் சைவ மாணவர்களை உண்மைச் சைவர்களாக வாழும்படி வகுத்துவிட்ட பெருமை திரு. சிவபாதசுந்தரம் அவர்களையே சாரும். எஸ். எஸ். ஸி. பரீட்சைக்கு சமயபாடத்தை ஒரு பாடமாக்கச் செய்ததும் அப்பரீட்சைக்கு இப்பாடத்திற்கு முதற் பரீட்சகராய் இருந்து கடமையாற்றியவரும் இப்பெரியாரே.

அவர் எழுதிய சைவ போதம் முதலாம் இரண்டாம் புத்தகங்கள், சைவக் கிரியை விளக்கம், கந்த புராணவிளக்கம், சைவசமயசாரம், திருவருட்பயன் உரை என்றென்றைக்கும் சைவஉலகில் நின்று நிலவும். ஆங்கிலம் படித்தவர்களுக்கென எழுதிய "Siva School of Hinduism" என்னும் நூல் என்ஞான்றும் அவரின் ஆங்கில அறிவையும் அவரின் சைவ அபிமானத்தையும் அவரின் சைவசித்தாந்தநுட்பத்தையும் எடுத்துக் காட்டும்.

அவர் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த சைவப்பெரியார். அவர் போதனையிலும மாத்திரமல்ல சாதனையிலும் கை

ஆசிரியர்

திரு. செ. சின்னத்துரை அவர்கள்

தேர்ந்தவர். வாய்வேதாந்தம் மாத்திரம் பேசுகிறவர்களைக் கண்டிக்கும் நடுவு நிலைமையுள்ளவர். கொழும்பு விவேகானந்த சபைக்கும் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைக்கும் அவர் தமது பதிப்புரிமையை வழங்கினதால் அவரின் நோக்கு எதில் லயித்திருந்தது என்பது வெள்ளிடை மலை. அவரால் தேடப்பட்ட பொருள் யாவும் சிவபணிக்கே செலவிட பட்டது. உள்ளதை உள்ளவாறு துணிவுடன் எடுத்துக் கூறும் ஆற்றல் வாய்ந்தவர். ஆடம்பர சீவியத்தை விரும்பினாரல்லர். அன்னியரின் தீய நாகரிகத்தையும் பழக்க வழக்கங்களையும் நஞ்செனஒதுங்கித் தள்ளினார். அவரிடம் கல்வி பயிலும் வாய்ப்புப் பெற்ற மாணவர்கள் இதைப்பற்றி நன்கு உணர்வார்கள்.

சைவசித்தாந்தத்தில் மாத்திரமல்ல தர்க்க சாஸ்திரம், அகநூல், கணிதம் முதலிய கல்வித் துறைகளிலும் ஆழ்ந்த அறிவு கைவரப்பெற்றவர். ஆசிரிய பதவியிலிருந்து விலகிய காலம் தொடக்கம் [illegible] வனத்திலுள்ள [illegible] சாலையில சைவ வாழ்ந்து காலத்தைக் கழித்தார். சகலருக்கும் ஓர் முன் மாதிரியாகவும் ஆசிரியராகவும் விளங்கினார்.

ஆறுமுகநாவலர் பெருமானுக்குப்பின் இலங்கையில் சைவத்தில் தனிப்பெருமதிப்பைப்பெற்றவர்களுள் இப்பெரியாரும் ஒருவரே. இப்பெரியாரின் எழுத்துக்கும் பேச்சுக்கும் தனிப்பெருமை உண்டு. கற்றவர் கல்லாதார், அரசியல் மேதை, குடியானவர் யாவருடைய கண்ணியத்தையும் பெற்று இப்பெரியார்விளங்கினார். இவரால் ஆங்கிலத்தில எழுதப்பட்டு பிரசுரிக்கப்படாமலிருந்த "சைவத்தின் பெருமை "Gloris of Saivaism" என்னும நூல் சில மாதங்களுக்கு முன் அச்சிடப்பட்டிருக்கின்றதை நினைக்க சைவ மக்களுக்குப் பெரு மகிழ்ச்சியை ஊட்டும். இவரால் எழுதப்பட்ட இரண்டு ஆங்கில நூல்களும், சைவபோதம் இரண்டாம் புத்தகமும் திருவருட்பயன் உரையும் என்ஞான்றும் சைவ உலகில் நின்று விளங்கி இவரது சைவசித்தாந்த நுண்ணறிவையும், ஆழ்ந்த சிந்தனையையும், தமிழ்மொழி ஆற்றலையும் எடுத்துக் காட்டி நிற்கும்.

இப்பெரியாருக்கு நாம் செய்யும் கடமை அவரைப் போல் தூய சமயவாழ்க்கை உடையவர்களாகவும் ஆழ்ந்த சைவ அறிவுடையவாகளாகவும் வாழ்வதேயாகும். இப்பேரறிஞரின் ஆன்மா சாந்தி அடைக!

### திருக்கேதீச்சரம் ஆடித் திருவிழா

ஆடி மீ 22 உ (7—8—55) ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் திருக்கேதீச்சர நாதருக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும், கதாப்பிரசங்கம் திருப்புகழ் பசனை ஆகியவையும் இரவு விசேட ஆராதனை சுவாமி வீதிவலம் வருதல் ஆகியவையும் நடைபெற [illegible] ஒழுங்கு செய்து இருக்கின்றனர்.

## அந்நியர் ஆட்சியை ஒழிக்க ஆசிய எழுச்சி

### சிங்கப்பூரிலும் கோவாவிலும் தேசீயத்தை அடக்க முடியுமா?

அரசதந்திர சம்பிரதாயத்தாற் சிங்கப்பூரை ஆண்டுவிடலாம் என்று ஆங்கிலேயர் ஆனமட்டும் முயன்று வந்தார்கள். ஆனால் அங்கே தேசிய உணர்ச்சி வீறுகொண்டெழுந்துவிட்டது. சட்டசபையில் ஒரே ஒரு விபரீதக் குரலுக்கெதிராக இருபத்தெட்டங்கத்தினரும் பூரண சுயஆட்சி வேண்டுமென்று முடிவு செய்துவிட்டனர்.

தேசாதிபதி செய்வதென்னவென அறியாது திகைத்து நின்றார். இங்கிலாந்தில் இருந்து வான்வழி பறந்தோடிச் சிங்கப்பூர் சேர்ந்திருக்கின்றார் திரு. மற்கொம்மக்டொனல்டு.

கோவாவிலே இன்னமும் அரச ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்று வீரம் பேசித்திரியும் வல்லரசுகள் உலக சமாதானத்துக்காக ஏன் மாநாடுகள் கூட்டுகின்றார்களோ என்பது மர்மமாயிருக்கின்றது. கோவாவிலே நிலைமை கொந்தளித்தவண்ணமாயிருக்கின்றது. போர்த்துக்கேயர் நியாயம் நீதிக்குக் கட்டுப்பட்டவர்கள்போலக் காணப்படவில்லை. பாரத நாட்டார் காந்தியக் கொள்கைப்படி படையெடுக்க மாட்டார் என்ற துணிவினாற்போலும் செய்யக் கூடிய தீமையெல்லாவற்றையும் இழைக்கிறார்கள். இந்திய நாட்டின் பரப்பெங்கே? எங்கேயோ ஒரு மூலையில இருக்கின்ற கோவாவின் அளவென்ன? மலைக்கும் ஒருசிறு கற்கும் பிக்கும உள்ள வகையில் இவ்விரு நாடுகளுக்குமிடையே போர்நடந்தால் உலகம் சிரிக்கமாட்டாதா? இதை யறியாது போர்த்துக்கேயர் பாரதநாட்டைப் பழியான வகையில் இழுத்து விடலாமெனக் கங்கணங்கட்டி நிற்கின்றார்களே. இந்தப் போர்த்துக்கலை உலக ஐக்கியநாட்டமைப்பில் வழிகாட்டிகளாக இருக்கும் வல்லரசுகள் வழிப்படுத்த மாட்டார்களா?

### புத்தியறிந்த தொகுதி

1947-ம் ஆண்டிலே தமிழ்யாநாட்டுக் கட்சியின் அரணாயிருந்து 1952-ல் அக்கோட்டையை வீரத்துடன் பாதுகாத்து வந்த ஒரு பாராளுமன்றத் தொகுதி இருந்தாற் போலப் புத்தியறிந்து விட்டது. எந்தக் கட்சியை எங்கு சென்றாலும்எதிர்ப்போம என்று 1947-ம் ஆண்டில் யாழ்ப்பாணக் குடாநாடெங்கும் எதிரொலி செய்ய இடிமுழக்கஞ்செய்த அத்தனை பேரும் இன்று அன்று இகழப்பட்ட கட்சியைப் புகழுகின்றார்கள் என்றால் இது ஒரு அற்புதமன்றோ? ஒன்றில் புத்திக்கலக்கமாயிருக்கலாம், இன்றேற் புத்தி முன் கலங்கி இப்பொழுது தெளிந்திருக்கலாம்; கூத்தாட்டி தலையாட்டத் தலையாட்டக் கூத்துப் பார்ப்போரும் அவ்வண்ணஞ் செய்வதுபோல அங்கத்தவர் கட்சிக் கப்புப் பாய வாக்காளர்களும் அப்படி மாறிக்கொண்டிருப்பது யாழ்ப்பாண நாட்டில் நடவாத ஒரு காரியம். ஆனால் அது நடந்து விட்டதென நாளுக்கு நாள் செய்தித் தாளிற் படம் பிடித்துப் பகிரங்கப்படுத்தும் வேலையின் பெறுமதி அடுத்த பொதுத் தேர்தலிலேதான் கணிக்கப்படும்.

### அரசாங்க மேற்சபைத் தலைவர் கருத்து

காலி இறிச்மன்ட்கல்லூரிப் பரிசளிப்புக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசும்போது உயர்தரக் கல்விபற்றிய ஆலோசனை, மக்கள் மனங்களில் இன்று நிலவுகின்றது. இக்காரியம் என்னுடைய எண்ணத்தின்படி செயவதானால் ஆங்கிலமே உயர்தரக் கல்வி மொழியாக நான் அமைப்பேன என்று அரசாங்க மேற்சபைத் தலைவர் சேர். சிறில் டி. சொயிசா கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம் அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். மன்மத ஹு ஆடி மீ
கந உ வெள்ளிக்கிழமை

## இடம் உண்டு மனம் இல்லை!

பாராளுமன்றத்திலே இன்று உள்ள நிலையில் அரசு நடத்தும் ஆதிக்கக் கட்சியின் ஆட்பலன் முன்னெருபொழுதும் இருந்ததில்லை. இனிமேல் வாய்க்கப்போவதுமன்று. இவ்வாறு செவ்விதாக வேரூன்றியிருக்கும் கட்சி தனது கொள்கைகளிலே 'மதுவிலக்கையும்' 'இருமொழி அரசியலை'யும் முக்கியமானவை என்று முப்பொழுதும் சொல்லிய வண்ணம் இருக்கின்றது. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளும் ஆற்றல் அமைச்சர்களுக்கு இன்றியமையாது வேண்டப்படுவது. இதையும் மறந்து ஐக்கிய தேசியக்கட்சி அரசு மதுவிலக்கையோ அரசமொழிகள் நிலைமையையோ சட்டப்படி நிலைநிறுத்த முன்வராது நிற்கின்றமையை நோககுமிடத்து இக்கட்சி, மக்கள் ஆட்சிக்குகந்ததா என்ற ஐயம் எழுகின்றது.

முன் முதல் அமைச்சராக இருந்து முன்வினைப் பயனுற் பதவியிலிருந்து விலகியவர் என்று அழைக்கப்படும் திரு சேனநாயக (இரண்டாம்) மதுவிலக்கைத் தமது முதற்கொள்கையாகக் கொண்டு ஊர் ஊராய்ப் பிரசாரஞ் செய்து வருகின்றார். இவர் ஐ. தே. க. ஆரம்ப அங்கத்தவர். இப்பொழுது அதற்கு அச்சாணி போன்றிருக்கின்றவர். இவரது மதுவிலக்குக் கொள்கையை இக்கட்சியும் அங்கீகரித்துவிட்டது ஆனால் ..... ....? ஆட்பலத்தால ஆற்றல பெற்றிருக்கும் ஆதிக்கக் கட்சி 'மதுவைப்பற்றி ஒரு விசாரணை ஆணைக்குழுவை அமைத்துவிட்டுத் திரு. சேனநாயகவுக்கு ஆறுதல கூறிவிடலாம் என்று நினைத்தது. இருந்தும் திரு சேனநாயக தொடர்ந்து முழக்கஞ் செய்து வருகின்றார். வரவு செலவுத் திட்ட விவாதத்திலே தமது கட்சிக்குதவிக்காக பல நாழிகைப்பொழுது சொற்பெருக்காற்றிய இவர் மதுவிலக்கைப்பற்றிக் கூறியவற்றிற்கு அரசாங்கம் என்ன மறுமொழி சொல்லுதல முடியும் என்று யாம் கேட்கின்றோம்.

நினைவுக் கட்டுரை:

# பண்டித சம்பந்தர்

பண்டித ம வே தி. சம்பந்தன் அவர்கள் புகழ்மிக்க குடும்பத்தில் பிறந்ததினுல் மாத்திரம் புகழும் புலமையும் பெற்றவால்ல. அவரது குடும்பத்தினர்—சந்ததியினர் அவராலே தான் தமது குடும்பப் பெருமையை மேலும் உயர்த்திக் கொண்டனர். அவ்வளவு பண்பும் பல்கலைப் பழக்கமும் பெற்ற தமிழறிஞர் உயர்திரு. ம வே. தி. சம்பந்தன் அவர்கள்.

அகன்ற விசாலித்த நெற்றி. ஆழமுங் கூர்மையும் வாய்ந்த கண்கள். ஒளிவீசும் பற்கள். நெற்றியில் அணிற்கோடுகள் போன்ற கவினமைந்த திருநீற்றுப் பூச்சு வரிசை. அதன் கீழ் ஜீவத்துவம் ததும்பும் மூவூவீசை. குள்ளமான உருவம். சிவந்த தோற்றம். தலையில் குறைந்த பசிய புற்றுனிகள் போன்ற மயிர்க்கூட்டம். இத்துடன் இந்த அகிலத்தையே நகைச்சுவையால் குலுங்க வைக்கும் இன்தமிழ்ப் பேச்சு இத்தனையுமுடைய ஒரு உவந்த சைவர் — பத்திரிகை ஆசிரியர், தமிழாசிரியர், உரையாசிரியர், சிறுகதை, நெடுங்கதை நாவலாசிரியர், இவ்வளவு காலமும் யாழ்ப்பாணத்தில் இருந்தார், வாழ்ந்தார். மறைந்துவிட்டார். ஆம். அவரது பூதவுடல் மறைந்துவிட்டதே தவிர அவருடைய புகழுடம்பு அவ்வளவு சுலபத்தில் மறைந்துவிடக்கூடியதல்ல. அந்த வல்ல மனிதர் "நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்" என்ற இலட்சியத்துடன் 'பரிபூரணன' ஒருவனுக்கே அடிமை செய்து எழுபது ஆண்டுகள் இந்த யாழ்ப்பாணத்து மண்ணில வாழ்ந்த பண்டிதர் உயர்திரு ம. வே. தி. சம்பந்தன் அவர்களை உன்னும்போது அவர் பிரிவை எண்ணும்போது என்போன்ற இளைஞர்கள் தமிழினத்தில் மதத்தாற் பிளவுபட்டு வெதும்பும் பக்களின கூட்டத்தின் நிலையை எண்ணிக் கவல்பவர்கள் ஒருக்காலும் கவலையுறு மலிரார். உயர்திரு பண்டிதரவர்கள் நல்ல சைவர். தமிழ் உள்ளத்தினர். எக்காரணமும் கொண்டும் நெஞ்சிற்படுவதை வஞ்சித்துரைக்காத வாய்மையாளர். 20-7-55 புதனன்று அவர் எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார். துயரம் எம்மை வாட்டுகிறது.

### பண்பாடு மிக்க பத்திரிகாசிரியர்!

பண்டிதரவர்கள் பத்திராசிரியராகவும், தமிழ்ப்போதகாசிரியராகவும் பணி புரிந்திருக்கிறார். அதிலும் தமிழ்ப் போதகாசிரியராகப் பணி புரிந்த காலத்தைவிட அவர் பத்திரிகாசிரியராக இருந்த காலம் கூடியது. 35 வருட காலம் தமிழ்ப் போதகாசிரியராக இந்துக்கல்லூரியில் (யாழ்ப்பாணம்) பணிபுரிந்த பண்டிதரவர்கள் 42 வருட காலம் "இந்துசாதனம்" பத்திரிகாசிரியராகப் பணி புரிந்தமையே அவர் பெருமைக்கேற்ற சான்றாகும். தமது வாழ்நாளில் அறுபது வீதத்திற்கு மேற்பட்ட பங்கைத் தமிழ் சமயம் இரண்டிற்குமாக அர்ப்பணித்த பெருமை அன்னாருடையது. நாவலர் வழி நின்ற அப் பெரியார் "காலத்தோடமைந்த கருத்துக்களையுடையவர்" என்பதாகச் சிலர் கருதிய போதிலும் அவருள்ளத்தே உண்மையான சமநோக்கு ஒளிவிட்டுக்கொண்டிருந்ததென்பதை அவருடன் பழகியவர் எளிதிலுணர்வர். பண்டிதரவர்கள் மாற்றார் கூறப்படும் 'பழமைப்பிடிப்பில்' இருந்தமைக்கு அவர் வாழ்வின் சூழ்நிலையே வழியமைத்ததெனபது என்போன்றோர் துணிபு. எழுத்துலகில் அரிச்சலும் புகைச்சலும் நிறைந்துள்ள இக்காலத்தில பண்டிதரவர்கள் தம் உள இளமை காட்டி இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்து வந்தாரென்பதற்கு நான் ஒரு சாட்சி. நான் முதல் முதல் எழுதிய பத்திரிகை இந்து சாதனமே. 1947ம் ஆண்டு திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில ஜே. எஸ் ஸி வகுப்பில் நான் படிக்கும் போது இந்துசாதனம் விசேட மலரொன்று வெளியிட்டது. அதில் எனது முதலாக்கமான கவிதை ஒன்றினை வெளியிட்டு அதைத் தொடர்ந்து என்னை எழுதுமாறு ஊக்கம் தந்தவர் பண்டிதரவர்களே. அன்றியும் "இந்து சாதனம்" பத்திரிகைக்கு உதவியாசிரியர் தெரிவு ஒன்றினை நடத்தியபோது பண்டிதரவர்கள் என்னை அப்பதவிக்குத் தெரிந்தெடுக்க முயன்றமையும் [illegible] எனக்குத் தெரியும். பண்டிதரவர்களது முயற்சி நிறைவேறியிருந்தால் நான் இப்பொழுதைய நிலைக்கு (கிறிஸ்தவராக) வந்தமையிட்டுப் பண்டிதரவர்கள் ஒருவேளை கவலையுறுமலிருந்திருக்கலாம். எது எப்படியாயினும் ஈழத்தில பல்லாண்டு காலம் பத்திராசிரியராக — நல்ல ஒரு நகைச்சுவைப் பேச்சாளராக விளங்கி இளைஞர்களை ஊக்கிவந்த ஒரு பெரியாரை நாம் இன்று இழந்து நிற்கிறோம்.

"நாவேந்தன்"

### பண்டிதர் தமிழ்!

"கல்கியையும்" "ஆனந்த விகடனையும்" விழுந்து விழுந்து படித்துக்கொண்டிருக்கிற யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் விரும்பிப் படிக்கிற இன்னொரு பத்திரிகை இந்துசாதனம். இத்தனைக்கும் அதுமுன் கூறிய பத்திரிகைகளுடன் முற்றிலும் முரண்பட்ட நிலை வாய்ந்தது. அப்படியிருந்தும் அதன் வலிகுன்றாமைக்குக் காரணம் பண்டிதரவர்களின் தமிழின் சக்தியே. அவரது எழுத்து நடையிலே இனிமை தவழும். நகைச்சுவை ததும்பும். பண்பாடு — வரம்பு பரிமளிக்கும். அவரது "உலகம பலவிதக்கதை" அதற்கோர் எடுத்துக்காட்டு பண்டிதர் தமிழை யறியாத இந்துக் கலலூரி மாணவர்களும் இந்துசாதன வாசகர்களும இலக்கிய ரசிகர்களும் இருக்க முடியாது!

### நல்ல பேச்சாளர்!

இலக்கியம், சமயம், அரசியல் எதுவானாலும் எடுத்துக்கொண்ட விஷயத்தை நகைச்சுவை ததும்பப் பேசுவதில அவர் ஒரு புலி. 'தர்க்கம்' என்ற ஒன்றில் இறங்கிவிட்டாலோ பண்டிதர் சிரிக்கச் சிரிக்கப் பேசி எதிரியைத்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# ஸ்ரீ சிவபாதசுந்தரனுர் நினைவு

## பலஇடங்களில் கொண்டாட்டங்கள்

### திருக்கேதீச்சரத்தில்

ஷை நினைவு நாள் 25-7-55 திங்கட்கிழமையன்று திருக்கேதீஸ்வராலயத்தில் அகில இலங்கைச் சிவனடியார் சங்கச் சார்பாகக் கொண்டாடப்பட்டது.

அன்று பகல் எட்டுமணியளவில் அபிடேக பூசைகள், திருமுறைப் பாராயணம் முதலியனவும் 11 மணியளவில் ஸ்ரீமத் நடராசமூர்த்திக்கு விசேட தீபாராதனை பூசைகளும் சிவபுராணம் படித்தல் முதலியனவும் நடைபெற்றன

அன்று பிற்பகல் திருக்கேதீச்சர வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திரு. இராமுப்பிள்ளையவர்கள் தலைமையில் நாவலர் நூல்நிலைய மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது.

மாணவர் சிவபாதசுந்தரனார் நினைவாக அவர்மேல் இயற்றப்பட்ட பாக்களைப் பாடினர். பின் சைவத் திருவாளர் S. கோவிந்தசாமி அவர்கள் "சிவபெருமான் பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தமை" என்ற கதையைச் சொல்லி அதில் பெரியார் அவர்கள் செய்த தொண்டுகளை மாணவர்களுக்கு எடுத்துச் சொல்லி விளக்கினர். மாணவர்களுக்கு நாவலர் திருமடத்தில் அன்னதானம் செய்யப்பட்டது.

### கந்தவனக் கடவையில்

ஷை தினம் 25-7-55 ல் கந்தவனக் கடவையிலும் விசேட ஆராதனை பூசைகளோடு நடைபெற்றது. இதில அநேகமாணவர்களும் பெற்றோர்களும் பங்குபற்றினர்.

### காரைநகரில்

காரைநகர் வியாவில் சைவபரிபாலன வித்தியாசாலையில் நிகழும் ஆடிமாதம் எ-ந்உ (23-7-55) சனிக்கிழமை மாலை ஸ்ரீமான். மு. ஞானப்பிரகாசம் B.A., B.Sc. அவர்கள் தலைமையில மேற்படி விழா ஆரம்பமாயது. பாடசாலை மாணவர்கள் சைவசமயப் போதனைகள் சம்பந்தமான பல காட்சிகளைக் காட்டி. சபையோரை மகிழ்வித்தனர்.

தலைவர் அவர்கள் சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் பிள்ளை அவர்கள் வாய்ப் பேச்சினாற் காரியங்கள் செய்யவில்லை யென்றும், செயலினாலேயே சமயத்தை வளர்த்த பெரியாரென்றும அவ்வாறு நாமும் அவரைப் பின்பற்ற வேண்டுமென்றும் கூறினர்.

பிரம்மஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள் B.A., ஸ்ரீமான், நா. சிவப்பிரகாசம் இந்துசாதனப் பத்திராதிபர், சைவப்பிரசாரகர் ஸ்ரீமான் வே. சங்கரப்பிள்ளை ஆகியோர் சைவப் பெரியார் சிவபாத சுந்தரம் பிள்ளை அவர்களது சைவத் தொண்டையும், சைவ உலகில் அதனால் நிலைநாட்டிய சைவ வாழ்க்கையையும், பரசமய ஊழல்களைக் கண்டித்து உண்மையை நிலைநாட்டப் பல நூல்கள் எழுதியதையும்பற்றி விரிவாகப் பேசினார்கள். ஸ்ரீமான். மு. வேலுப்பிள்ளை ஸ்ரீமான் M. A. கந்தையா. ஸ்ரீமான். பொ. நவரத்தினம் B. A., ஆகியோர் குறிப்புரை கூறினர். நாம் அப்பெரியாருக்குச் செய்யுந் தொண்டு அவர் செய்த தொண்டைத் தொடர்ந்து செய்வதேயாகுமென்று யாவரும் வற்புறுத்தினர்.

### சைவபரிபாலனசபை நாவலர் மண்டபத்தில்

சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம்பிள்ளையவர்களின் நினைவுநாள் சைவ பரிபாலன சபை நாவலர் மண்டபத்திற் கொண்டாடப்பட்டது. கொண்டாட்ட நிகழ்ச்சிகளுக்கு முன் பண்டிதர் திருஞானசம்பந்தர் அவர்கள் மறைவுபற்றி இரண்டுநிமிட மௌனம அனுட்டிக்கப்பட்டது.

வழக்கறிஞர் திரு. அ. அருளம்பலம் அவர்களும் திரு. என. சேனாதிராசா அவர்களும் சைவப் பெரியார் சிவபாதசுந்தரம அவர்களின் வாழ்க்கை முறை அவர் செய்த தொண்டுச் சிறப்பு ஆதியவற்றை எடுத்துக் காட்டினார்கள். முகாந்திரம் இ. பொ. இராசையா அவர்கள் நன்றியுரை கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் இலக்கணம்

## மாணவர் வாழ்க்கையை உருவாக்கும்வழி

[கோச்சடையில் நடந்த ஆசிரியசங்க ஆண்டுவிழாவில் கலாநிதி, மா. இராசமாணிக்கனார் பேசிய பேச்சின் ஒரு பகுதி ]

"ஆசிரியர்கள் எக்கட்சியிலும் சேரலாகாது. மேன்மேலும் மாணவர்களின் அறிவை வளர்ப்பதே ஆசிரியர் கடமை. பொறுமை அன்பு, நடுவுநிலைமை தவறாமை, தொண்டு என்பன ஆசிரியர்க்கு அணிகலன்களாகும்."

நமது சமுதாயத்தில் ஏறத்தாழ மூவாயிரம் சாதிகள் உள்ளன. ஒவ்வொரு சாதியிலும் 3 முதல் 12 வரை உட்பிரிவுகள் இருக்கின்றன. இப் பலவகைப்பட்ட சாதிகளோடு இந்நாட்டில் சைவம், வைணவம், கிறித்தவம், இஸ்லாம், சமணம் முதலிய சமயங்களும் இருக்கின்றன. இவ்வனைத்தையும் சேர்ந்த பிள்ளைகள் நம்மிடம்படிக்க வருகிறார்கள் என்பதை ஆசிரியர் அழுத்தமாக மனத்தில் வைத்திருத்தல் வேண்டும். இப் பலதிறப்பட்ட பிள்ளைகளுக்குப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர் சமயத்துறையில் பொது நோக்குடையவராகவும் சாதி வேறுபாடு அற்ற உள்ளமுடையவராகவும் இருத்தல் இன்றியமையாதது. இவை ஆசிரியர்க்குத் தேவையான முதல் இரண்டு பண்புகளாகும். நமது சமுதாயத்தில் நூற்றுக்கு 85 பேர் கல்வியறிவற்ற பாமரர், பலர் ஏழைகள்; பலவகையான பழக்க வழக்கங்களை உடையவர்கள் இப் பலபலதிறப்பட்ட பெற்றோரும் தம் பிள்ளைகள் உருப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு நம்மிடம் பிள்ளைகளை ஒப்படைக்கிறார்கள். ஆதலால் பிள்ளைகளைக் கல்வியிலும், ஒழுக்கத்திலும் சிறந்தவராகச் செய்ய வேண்டுவது நமது சிறப்புக் கடமையாகும். பல திறப்பட்ட பிள்ளைகள் ஒன்று சேரும் வகுப்பில கூச்சலும குழப்பமும் சண்டையும் வம்பும் சில சமயங்களில் ஏற்படுவது இயற்கை. ஆசிரியர் பொறுமை, நுண்ணறிவு, அன்பு ஆகிய மூன்று பண்புகளாலும் வகுப்பில் அமைதி நிலவச் செய்யலாம். கோபக் குணமுடையவர் ஆசிரியர் வேலைக்குத் தகுதியற்றவர்.

எதிர்கால மக்களை உருவாக்கும் நற்பணியில் நாம ஈடுபட்டிருக்கிறோம் என்பதை ஆசிரியர் மறந்துவிடலாகாது. ஆதலால் அவர் நாள் தோறும் வகுப்பில கற்பிக்க இருக்கும் பாடங்களை வீட்டில் முன் கூட்டிச் சிந்தித்துக் குறிப்புகளைத் தயார் செய்து கொள்ளல் வேண்டும். இங்ஙனம் தயார் செய்துகொள்வதோடு பிள்ளைகள் உள்ளங்களைக் கவரத்தக்க முறையில் பாடம் கற்பித்தல் ஒன்றே ஆசிரியர் மதிப்பை உயர்த்தும் வழியாகும். இன்ன ஆசிரியர் நன்றாகக் கற்பிக்கிறார் இன்ன ஆசிரியர் கடனுக்கு அழுகிறார் என்று பிள்ளைகள் கூறுவதை இன்றும்கேட்கலாம். ஒருபாடம் கற்பிக்கையில் அதன் தொடர்பான பல செய்திகளை ஆசிரியர் கற்பித்துப் பிள்ளைகளின் பொது அறிவைப் பெருக்குதல் வேண்டும. இவ்வாறு செய்வதற்கு ஆசிரியர் தம் அறிவைப் பெருக்குதல் தாம் கற்றது கைம்மண்ணளவு என்பதையும் கல்லாதது உலகளவு என்பதையும் ஆசிரியர் எப்பொழுதும் நினைக்க வேண்டும. நினைந்து எப்பொழுதும் பல பொருள்களையும செய்தித்தாள்களையும பிறவற்றையும் படித்து அறிவுத் துறையில முன்னேறிக்கொண்டே செல்ல வேண்டும்.

ஆசிரியர்கள் இடைவிடாமல் உழைத்துத் தம் வாழ்க்கையை உயர்த்திக்கொள்ளுதல் வேண்டும். 'முயற்சி திருவினையாக்கும்" "உழைப்பே உயர்வளிக்கும்" என்னும் பொன்னுரைகளை ஆசிரியர்கள் காயத்திரிமந்திரமெனக் கொள்ளுதல் வேண்டும். ஆசிரியர்கள் தம்மிடம் படிக்கும் பிள்ளைகளுடைய பெற்றோருடன் அடிக்கடி தொடர்பு கொள்ள வேண்டும்; பிள்ளைகளுடைய படிப்பு, ஒழுக்கம பற்றி அவர்களிடம அடிக்கடி தெரிவித்தல் வேண்டும். மாணவர் தம்மிடம் குறை காணும்படி ஆசிரியர்கள் நடத்தலாகாது. தெருக்களில் புகைபிடித்துச் செல்லுதல், கீழ்மக்களுடன் பழகுதல், சீட்டாடுதல் முதலியன ஆசிரியத் தன்மையை அதிகம் பாதிக்கத்தக்கவை. ஆசிரியர் பேச்சில் அருவருக்கத்தக்க சொற்கள் வரலாகாது. சுருங்கக்கூறின் மாணவர் வாழ்க்கையை உருவாக்கும் நன்மக்களாக ஆசிரியர்கள் விளங்குதல் வேண்டும்.

ஆசிரியர்கள் பொது நூல் நிலையங்களை நன்கு பயன்படுத்துதல் வேண்டும். கட்சி வேறுபாடு இல்லாமல் நாட்டில் வெளியாகும் எல்லாச் செய்தித்தாள்களையும் படித்துச் சமுதாய நிலையைநாள் தோறும் அறிதல் வேண்டும. சமுதாய நலத்துக்குரிய செய்திகளைப் பிள்ளைகளுக்கு ஊட்டவேண்டும். அரசியல், சமயம், சமுதாயம் பற்றிப் பேசப்படும் சொற்பொழிவுகளைக் கேட்டு ஆசிரியர்கள் அறிவு வளர்ச்சி பெறுதல் இன்றியமையாதது. மலர்தோறும் சென்று தேன் சேர்க்கும் தேனீப்போல ஆசிரியர்கள் கட்சிவேறுபாடின்றி எல்லாக் கட்சிக் கூட்டங்கட்கும் சென்று அவரவர் பேச்சுக்களிற் காணப்படும் நல்லவற்றை மட்டும் உட்கொள்ளுதல் வேண்டும்.

இறுதியாக ஆசிரியர்கள் தாய்மொழிப்பற்று மிகுந்தவர்களாக இருத்தல் வேண்டும்; தாய்மொழியில் பிழையறப் பேசவும் எழுதவும் வல்லவர்களாக இருத்தல் வேண்டும். எல்லாப் பாடங்களையும் தாய்மொழியிலேயே கற்பிக்கவேண்டியிருப்பதால் ஆசிரியர்கள் தாய்மொழிப் பயிற்சி மிக்கவர்களாக இருத்தல் வேண்டும்.

# அன்பின் அளவே அருள்

3-ம் பக்கத்தொடர்ச்சி

அரசாண்டான். இரு நூறு ஆண்டுகளுக்கு முன் ஆறாயிரம் மைலுக்கு அப்பாலிருந்து பாரத நாடு வந்த கூட்டத்தவருள் உலாந்தாக்காரர் போர்த்துக்கீசர் அநீதியால் அடங்கினர். ஆங்கில ஆட்சி மக்கள் உள்ளப்படி நிலை நின்றது சமீப காலத்தில் தான் சமயவுண்மையுணரற்கேற்ற போதனை குன்றச் சமயப் பூசல்கள் ஆரம்பமாகின்றது என்னலாம். பண்டைய அரசர்களின் சமயப் பற்றும் மக்களின் மாசற்ற அன்பும் ஆலயங்களாய் மடங்களாய்க் காணப்பெறுகின்றன. இருபதாம் நூற்றாண்டில் வருமா ஆச்சிர மக்கள் நசுக்கப்படல்வேண்டும் என்ற கொள்கையும் பேச்சும் தலைகாட்டின. அடியார்கள் தமிழில் வழிபாடு செய்தனர். அவர்கள் வழிபட்ட பெருந்தலங்கள் இன்றும் இருக்கின்றன. வடமொழி வேண்டாம் என்று அப் பெருமக்கள் கூறவில்லை. அரசருங் கட்டளை இடவில்லை. இப்போதுதான் புதிய புதிய இடர்ப்பாடுகள் தோன்றுகின்றன. சமய பரிபாலனம் என்ற பெயருள் மறைந்து சமயத்திற்குத் தீங்கு விளைப்போர் நலமடைவது அரிது. சிதம்பரத்தில் வேதாகம முறை வழுவாது கும்பாபிஷேகம் நடந்து சைவநெறி கண்கொள்ளாப் பேரின்பம் அளித்தமை சைவ மக்களின் முழு அன்பு என்றே கூறலாம். அனுபானமின்றி மருந்து பயன்படாது. சாத்திர வரம்பு இல்லாத வழிபாடு துன்பமே வளர்க்கும். சிவசாதனங்களை இகழுவோர் சைவ சமயிகளா? சைவப் புலவர்களா? சமய நூல்களை நன்கு பயின்றால் மக்கள் வாழ்க்கை சீர்ப்படும். சைவசமய நூல்களில் பழங்கதை இல்லை. பதி, பசு, பா, நித்தியத்துவம் பசுமரத்தாணி அறைந்தாற்போல இனிது விளக்கப்பட்டது. புராணக் கதைகளும் அவரவர் பக்குவத்திற்கு ஏற்கப் பொருள் காணநிற்கும். சமயம் என்பது வாழ்க்கைப் பயனை அமைத்து உண்டாக்கப்பட்டது. 'பாவம் சமம் என்று கிறீஸ்தவர் கூறுகிறார்கள் அதனால் அச்சமயம் வளர்கிறது என்றும்" சிலர் கூறுகின்றனர் மேனாடுகளில் அரச குடும்பம் என்று உயர்பகுதி இருப்பதை இவர்கள் அறியார்போலும். லாற்றீன், கிரேக்கு முதலிய மொழிகளால் ஆராதனை செய்வதைக கத்தோலிக்க குரு

## கோவாப் பிணக்கின் எதிரொலி

இந்திய உலகசபையிலே பண்டிதநேரு அவர்கள் பேசும்போது கோவாவை இந்தியாவுடன் இணைக்கும் இயக்கம் உச்சநிலை அடைகின்றது என்பதைக் குறிப்பிட்டார். அத்தொடர்பில் ஆவணி (ஒகஸ்ற்) 8-ந் திகதி தெல்லிமாநகரத்திலுள்ள போர்த்துக்கேய நாதவர் காரியாலயம் மூடப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது.

மாரிற் பார்த்து உண்மை கடைப்பிடிப்பது அறிவுள்ளார்க்கு அழகாகும். பொதுவாகச் சமயநிலையும், நல்லொழுக்கமும் தமிழ் மக்கள் கைக்கொள்ள வேண்டுவன. எம்மொழியால் இறைவழிபாடு செய்தாலும் அன்பின் அளவுக்கே அருள் பெறலாம். வீண் பிடிவாதம் காலக்கழிவன்றி, நலம்பெற வழி காட்டாது.

"அன்பைப்பெருக்கி யெனதா
நுயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே
இறையே பராபரமே"

— தாயுமானவர்


## Commission Sale
## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக்கோட்டு வழக்கு இல, 4714

வழக்காளி:— தொண்டமானறை யோசேப் விஜயரத்தினம் சாமுவேல்
எதிரிகள்:—

1 வல்வெட்டித்துறை, அமிர்தலிங்கம் செயவர்த்தனவும்
2 வல்வெட்டித்துறைநாகமணி மகள பாறுபதிப்பிள்ளையும்
3 வல்வெட்டித் துறை கர்த்தசாமி சபாரத்தினமும்
4 வல்வெட்டித்துறை பெண் பவளக்கண்டுவும்.
5 வல்வெட்டித்துறை T. சின்னத்துரை பாஞ்சோதி அல்லது சிகாரவடிவேலுவும்.

மேற்குறித்த வழக்கில் தீர்ந்த தீர்வையின்படியும் குறித்த கோட்டார் எனக்கனுப்பிய கொம்மிஷன் அதிகாரப்படியும இதன்கீழ் காணும் ஆதனங்கள் 1955ம் ஞூ புரட்டாதி ௴ 5உ (5 9 55) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கமாக குறித்த ஆதனங்களிடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமாராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று, வல்வெட்டித்துறை ஆனைவிழுந்தான வீடு 1 ஷை நிலப்பரப்பு 43/8 இதில் வடகிழக்குப் பக்கில் 5 குளி ஆனால் ஆட்சிப்படியும் பங்கின்படியும் குளி 6 3/8, இதுவும் வடமேற்குப் பக்கமாகவுள்ள நிலப்பரப்பு 1 குளி 7 11/16 இல் கால்பங்கிற்குரிய குளி 12 27/32 உம் சேர்ந்து ஒரு கண்டமாயிருக்கிறது. குறித்த முழுக்காணியில் 5 குளியும 12 27/32 குளியுமாகிய இரு கண்டங்களுடன் மேற்குப் பக்கமாகவுள்ள கால்பங்கிற்குரிய நிலப் பரப்பு 1 குளி 7 11/16 ஆனால் 4660ம் இலக்கப் பட்டத்தின்படி குளி 15 13/16 இல மேற்கரைவாசிக்குரிய குளி 7 29/32ம் சேர்ந்து நிலப்பரப்பு 1 குளி $9\frac{1}{8}$ கொண்ட ஒரு கண்டமாயிருக்கிறது. இதற்கு எல்லை கிழக்கு வல்வை வைத்தீஸ்வரன்கோயிலுக்குரிய ஆதனமும் கையொழுங்கையும், வடக்கு மீன்சந்தையாகப் பாவிக்கப்படுவதும் வல்வெட்டித்துறை நகரசங்கத்துக்குரியதுமான ஆதனம். மேறகு நாகமணி வேலுசாமிக்கும் மனைவிக்குமுரிய ஆதனமும் மறு ஆதனங்களும், தெற்கு இராமலிங்கம் இரத்தினவடிவேலு பெண் சின்னமயிலுக்குரிய ஆதனமும். செல்வனுயகம பெண் செல்லக்கண்டுவுக்குரிய ஆதனமும். இவ்வெல்லைக்குட்பட்ட முழு நிலமும், புதிதாகக் கட்டப்பட்ட வீடும், அடுககளையும் மலகூடமும், கிணறும் குறித்த முழுக் காணிக்குள் இக் கண்டத்திற்கு தெறகுப்பக்கமாகவுள கிணற்றில் இதாகுரிய பங்கும் வழிவாய்க்காலுரித்தும்,

2, ஷை வல்வெட்டித் துறை, திருவத்தமபை நிலப்பரப்பு 32 5/8 எல்லை கிழககு M. பொன்னர் பெண் வள்ளிப்பிள்ளைக்கும், மறு பேருக்குமுரிய ஆதனம். வடக்கு 3ம எதிர்க்குரிய ஆதனம், மேற்கு காலஞ்சென்ற திருமேனியார் இராமசாமியின் உரிமைக்காரருக்குரிய ஆதனம் தெற்கு றோட்டு இவ்வெல்லைக்குட்பட்ட முழு நிலம், பனைகள், தென்னைகள் அடங்கலிற் சொரியலாய் $\frac{1}{8}$ பங்கும் தென்மேற்குப் புறமாகவுள்ள இரு குடிவசகள் முழுவதும்


| | |
|---|---|
| தாட்சி பண்ணப்பட்ட தொகை ... ... | 13,050-00 |
| 1-2-54 தொடக்கம் 4 1-.54 வரை முதல் ரூபா 10,000 க்கு 12 வீத வட்டி | 906-60 |
| ஆககூடிய தொகைக்கு கொமமிஷன திகதிவரை வட்டி | 407-07 |
| கோட்டுச் செலவு | 466-40 |
| | 14,830-07 |

வி. முதலியார் குழந்தைவேலு
(கொம்மிஷனர்)

பருத்தித்துறை,
16-7-55.

M, 92 ; 29-7.

சிருர் சிந்தனைச் சிறு மன்றம்




## பாட்டாவும்—பட்சமுள்ள பேரப்பிள்ளைகளும்

பாலர் பகுதிப் பாட்டன் பார்வையில்

ஆரா அன்பிற்குரிய பேரப் பிள்ளைகளே!

அறுபத்தாறுவது ஆண்டு சென்ற சாதன நங்கையின் பாலர்களுக்கு அநுபவ மிக்க பாட்டன் வழிகாட்டியாயிருப்பது பொருத்தமானதல்லவா? பாட்டன் என்றால் அநுபவப் பண்பாடுடையவர் என்று சொல்லாமலே அமையும் என்று உங்கள் பாட்டாவே உங்களுக்கு உரைக்கின்றார். செம்மை நெறிகாட்டும் சைவமும் தித்திக்கும் செந்தமிழும் இம் மன்றத்திற் கமழா நிற்பதற்கும் நீங்களே பொறுப்புடையவர்கள் ஆகின்றீர்கள் என்று ஆசிமொழி கூறிப் பாட்டா பாலகர்களுக்கு ஒரு மன்றம் நிறுவுகின்றார்.

## அளவிடற்கரிய அடியார் பத்தி

திருக்கோவலூரில் மெய்ப்பொருணாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். மலையமானாட்டை அரசாண்டவர் இவர் வேதங்களின் உண்மையை அறிந்தவர். சிவனடியார்களுடைய திருவேடத்தையே மெய்ப்பொருளெனச் சிந்தையிற் கொண்டவர். தம்முடைய இராச்சியத்தைத் தருமநெறி தவறாமல் நடத்திய வர். சிவாலயங்களெங்கும் பூசை முதலியன தவறாது செய்விப்பவர். சிவபக்தர்கள் வரும்போது வேண்டிய பொருளுதவி மனமகிழ்ச்சியோடு செய்பவர்.

இப்படி நடக்குங் காலத்தில் முத்திநாதன் எனஙிற அயலூர் அரசன் இவர்மீது பொறாமை கொண்டான். இவரோடு யுத்தஞ் செய்து பலமுறை தோற்றான். இதனால் அவமானமடைந்தான். பின்பு அவன் இவரை யுத்தத்திலே வெல்ல முடியாதெனக் கண்டு அவரிடத்திலே இருக்கின்ற அடியார் பக்தியை அறிந்து, விபூதிதரிக்கின்ற அவ்வடியார் வேடங் கொண்டு அவரைக் கபடத்தினால் வெற்றி கொள்ளக் கருதினான். ஒருநாள் சரீரம் முழுவதும் விபூதிதரித்துச் சடைகளைச் சேர்த்துக் கட்டி புத்தகக் கவளிபோலத் தோற்றுகின்ற ஆயுதத்தை மறைத்து வைத்துக்கொண்டு மெய்ப்பொருணாயனாருடைய மாளிகையை அடைந்தான். அப்பொழுது வாயிற் காவலாளனாகிய தத்தன் என்பவன் "இராசா இப்பொழுது நித்திரை செய்கிறார். நீர் சமயமறிந்து போகவேண்டும்" என்றான். அதற்கு அவன் நான் அவருக்குச் "சாஸ்திர உபதேசஞ் செய்யப் போகிறேன்" என்று கூறி உள்ளே புகுந்தான். மெய்ப்பொருணாயனார் நித்திரைசெய்ய அவர் மனைவியார் பக்கத்திலிருக்கக் கண்டும் சமீபத்திற் சென்றான்,

அப்பொழுது மனைவியார் சீக்கிரம் எழுந்து நாயனாரை எழுப்ப அவர் விழித்தெழுந்து, அவனை வணங்கி நின்று, சுவாமி இங்கே எழுந்தருளிய காரணம் யாது எனக் கேட்டார் அதற்கு அவன் "உங்கள் கடவுளாகிய பரமசிவன் ஆதிகாலத்தில் அருளிச்செய்த ஓராகம சாஸ்திரத்தை உங்களுக்குத் தனியாக உபதேசிகக வந்தேன்" என்றான். உடனே நாயனார் மனைவியாரை அந்தப்புரத்துக்கு அனுப்பிவிட்டு அதனைப் போதிக்கும்படி வணங்கி வேண்டினார். அப்பொழுது முத்திநாதன் தன் கையிலிருந்த வஞ்சகக் கவளியில் மறைத்து வைத்திருந்த உடைவாளினால் நாயனாரைக் குத்தினான். அப்பொழுது வாயிற்காவலனாகிய தத்தன் ஓடிவந்து தன் உடைவாளினாலே பகைவனை வெட்டப்போக, இரத்தஞ் சொரிய விழப்போகின்ற நாயனார் 'இவன் சிவனடியான்' ஆதலால் இவனுக்கு ஒரு இடையூறும் வராதபடி அழைத்துக் கொண்டுபோய் விட்டு வந்து மறுமொழி சொன்ன பின்பே என் ஆவிபிரியும்" என்றார். அதன்படி தத்தன் முத்திநாதனை அழைத்துக்கொண்டு போகும் வழியில் சனங்கள் இவனைக் கொல்லப்போக, தத்தன் அரசனின் கட்டளையைக் கூறினான். அதனால் எல்லோரும் விலகினர்.

தத்தன் திரும்பி வந்து "சிவனடியாருக்கு ஒரு இடையூறும் வராதபடி கொண்டுபோய் விட்டேன்" என்று கூறினான். அதன் பின்பு நாயனார் தனது குமாரர் மந்திரி முதலாயினோரை அழைத்து "விபூதி மேல் வைத்த அன்பைப் பாதுகாக்கும்படி" போதித்துத் தன்னுயிர் நீத்து சிவனடி சேர்ந்தார்.

செல்வி. இ. கமலாதேவி
யாழ்ப்பாணம்

## ஆங்கிலமே வேண்டும்

அராலி வாணி விலாச சபை 17-7-55 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திரு. நடராசா அவர்கள் குறிப்புரை நிகழ்த்தும்போது ஆங்கிலமே அரசகரும மொழியாகவும் உயர்தரக் கல்வி மொழியாகவும் அமைய வேண்டும் என்று கூறினார். அவர் மேலும் பேசும்போது ஆங்கிலம் சிங்களவர், தமிழர், இஸ்லாமியர் போன்றவர்க்குப் பொதுப்பாஷையாக இருந்துகொண்டு வந்தமையினால் வகுப்புத் துவேஷம் எழமாட்டாது. சிங்களம் தமிழ் என்பவற்றிற்கு முதன்மை ஸ்தானம் கொடுப்பதானால் இன்றைய நிலையில் ஓர் பாஷை மற்றப் பாஷையின் இடத்தை மறைத்துவிடும். விஞ்ஞானம், அரசியல் ஞானம், சமூக சாத்திரம், உளநூல், கணிதசாஸ்திரம் போன்ற உயர்தரக் கல்வி நூல்கள் ஆங்கிலத்திலேயே ஏராளமாகக் கிடக்கின்றன. ஆகவே ஆங்கிலத்தை முதன்மொழியாகவும், சிங்களம் தமிழை இரண்டாவதாகவும் வைத்தால் நாட்டின் ஒற்றுமை, உயர்தரக் கல்வி, பொருளாதாரம் என்பன முன்னேறும் என்று கூறினார். மேற்படி கூட்டத்திற்கு திரு. சு. யோகநாதன அவாகள் தலைமை தாங்கினர்.

## அன்பின் அளவே அருள்

## வாழ்க்கை சீர் பெறப் பயிலுக சமய நூல்

( உடுவில் தமிழ்ப்புலவர் பிரமஸ்ரீ வ. மு. இரத்தினேசுவர ஐயர் )

உலகத்தில் உயர்வான சமயம் சைவமே. பழமையும் பண்பாடும் சைவசமயத்திற்கு உண்டு. கிறிஸ்துவுக்கு முன்னும் மக்கள் இருந்தனர். சைவ சமயமும் தழைத்து இருந்தது கிறிஸ்துகருக்குப் பின் ஏழாம் நூற்றுண்டின்பின் சைவம் கெட்டுவிட்டதாகப் புத்தாராய்ச்சியாளர் சிலர் கூறுகின்றனர். அக்காலம் அவதரித்த அப்பர் சம்பந்தர் போன்ற சிவஞானச் செல்வர்கள் செய்த அற்புதங்கள் அளவற்றன. பத்தி வளர ஆலய வழிபாடு செய்த அவ்வடியார்கள் மாட்சி வெற்றுராய்ச்சிக்கு அகப்படாது. புறச் சமயிகள் சைவ சமயிகளுக்குச் செய்த இடையூறு பல. சமய குரவர்கள் இறைவனருள் வேண்டிச் செய்த அரும் பணிகளைச் சைவம் வளர வழி நாடும் அன்பர்கள் மறக்கலாமா? மறக்கலாமா? சில வகையில் தமிழ் மக்கள் பிரிந்திருந்தாலும் நானில மக்களும் துவேஷப் பேச்சில் ஈடுபடவில்லை. சிவலிங்க வழிபாடு முருக வழிபாடு முதலியன தமிழ் மக்களுக்குள் என்றும் இருந்தன. மனுதர்ம சாத்திரம் ஒரு சட்ட நூல். அரசனும குடிகளும் அதன்படி நடந்ததால் சைவ வைஷ்ணவ சமயங்கள் மிகவும் பரவச் செய்தனர். வேதாகம முறைப்படி ஆலயங்கள் நடத்தப்பட்டன. இன்ன இன்ன வருணத்தார் இன்ன [illegible] யங்களில் இன்ன இன்ன மண்டபங்களில்தான் போகலாம் என்றிருந்த காலம் அது. ஆங்கில அரசாட்சியில "நாலும் மனிதன்" என்று இறுமாந்த ஒரு கூட்டம் தோன்றியது. திருச்செந்தூர் சிதம்பரம் போன்ற பெருந் தலங்களில் தமிழ் மக்கள் தொடர்ந்த வழக்குகள் சென்னை உயர்தர நீதி மன்றத்தாரால் தள்ளுப்பட்டன. இது ஒருபுறமாக, மனுநீதி கண்ட சோழன் மும்மையாலுலகாண்ட மூர்த்திநாயனார் காலங்களில சிவபெருமான் அவர்கள் ஆட்சிக்குக் காட்சி கொடுத்தருளினமை கட்டுக்கதையன்று. சோழர் காலத்தில் திருக்கோயில்கள் பலப்பல தோன்றின, சாத்திர வரம்பு மீறாது அரசர்கள் நித்திய நைமித்தியங்களைக் கோயில்கள்தோறும் நடைபெறச் செய்தனர். தமிழ் மறைகளை ஆலயங்களில அன்புடன் ஓதிவந்தனர் தமிழில் அர்ச்சனை செய்யச் சட்டம் வேண்டினார் யாருமில்லை. அரசனையும் சமயமே பாதுகாத்தது. அவ தனது சமயநெறி [illegible]

தொடர்ச்சி 4 ம் பக்கம்

## சுயநலமில்லாத் தொண்டாற்றுமின்

யாழ்ப்பாண விவாகஇலாபநிதிச் சங்கத்திற் சொற்பொழிவு

நிகழும் 1955 ம் ஞு ஆடி மீ 16 ம் உ சனிக்கிழமை பிற்பகல் ஆனைப்பந்தி உயர்தரக் கலைமன்றத்தில் யாழ்ப்பாணவிவாக இலாபநிதிச சங்கத்தின் கூட்டம்கூடியது.

அவ்வமயம் இதன் உபதலைவர் திரு. வி. மோ. மனுவேற்பிள்ளையவர்கள் பேசும்போது இக்காலத்தில் சில சுயநலப் புலிகள் பட்டம் பதவிகள் பெறுவதற்காக மக்களின் ஒற்றுமையைக் கெடுத்து இந்நாட்டைப் பழுதாக்கிவிட்டனர். ஆகையால் நாமெல்லோரும் இழந்துபோன ஒற்றுமையை மீண்டும் நிலவச் செய்ய வேண்டுமாயின் எங்கள் சங்கம் போன்றவற்றை ஒவ்வோர் கிராமங்களிலும் தாபித்துச்சிறந்த தேசத் தொண்டைச் செய்யலாமென்றார்.

காரியதரிசி திரு. த. இராசரத்தினம் பேசும்போது "தேசத்தொண்டர்" என்னும் பசுத்தோல் போர்த்த புலிகளை நம்பி வீண் காலங் கழிக்காமல் இவ்விதமான சங்கங்களை மக்களிடையே பரப்பி தொண்டுசெய்தால் அவ்வண்ணம் சேவை செய்பவர்களை வருங்கால உலகம் போற்றுமென்றார். இச் சங்கத்தில் அங்கத்தினரைச் சேர்ப்பதற்குத் திரு. மு. சண்முகம், திரு. பொ. அந்தோனிப்பிள்ளை திரு. V. யோசேப், திரு. க. குசைப்பிள்ளை, திரு. எஸ். பஸ்தியாம்பிள்ளை, திரு. த. தர்மலிங்கம், திரு. வி. மோ மனுவேற்பிள்ளை ஆகியோரைக் கொண்ட உபசபை ஒன்றைத் தெரிவு செய்த பின்னர் கூட்டம் இனிதே நிறைவேறிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண நகரசங்கம்

### 1947ம் ஆண்டின் நகரசங்கச் சட்டம், இலக்கம் 29

இத்தால் யாவரும் அறிக, பின்வரும் விதிகளை யாழ்ப்பாண நகரசங்கம் விதித்திருக்கின்றது:—

1 1947-ம் ஆண்டின் 29 ம் இலக்க நகரசங்கச் சட்டத்தின் 245 (1) ம் பிரிவின்கீழ் 1956-ம் ஆண்டுக்கு வண்டிகளுக்கும் மிருகங்களுக்கும் அட்டவணையிற் சொல்லப்பட்டவரிவிதிக்கப்பட்டிருக்கின்றது

2 குறித்த சட்டத்தின் 246(1 ம் பிரிவின்கீழ் குறித்த வரி 1956 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) 31 ந் திகதியிலோ அதற்கு முன்னரோ கொடுபடவேண்டுமென்று விதித்திருக்கின்றது.

3 1947-ம் ஆண்டின் 29-ம் இலக்க நகரசங்கச் சட்டம் 245-ம் 246-ம் பிரிவுகளின்படி கொடுக்கப்படவேண்டிய வண்டிகள் மிருகங்கள் ஆகியவற்றின் எல்லா வரிகளும் 31-3-56 பிற்பகல் 3 மணிக்கு அல்லது அதற்கு முன்பு கொடுக்கப்படவேண்டும். அத்திகதிக்குப்பின் கொடுக்கப்படும் வரிகளில் 1947-ம் ஆண்டின் 29-ம் இலக்க நகர சங்கச் சட்டம் 252-ம், 255-ம் பிரிவுகளின்படியும் நகரசபை உபவிதிகளின்படியும், பிடிகட்டளைப் பணம் 10 வீதம் மேலதிகமாக அறவிடப்படும்.

4 1947-ம் ஆண்டின் 29 ம் இலக்க நகரசங்கச் சட்டம 245 ம 246-ம் பிரிவுகளின்படி, கொடுக்கப்படவேண்டிய வரிகள் கொடுபடாவிட்டால், வரி கொடுபடவேண்டிய வண்டிகள் மிருகங்கள் என்பவை நகரசங்கத்தார் நியமித்த உத்தியோகத்தரால் பிடிக்கப்படும்.

#### அட்டவணை

மோட்டார்வண்டி, மோட்டார் திரிசக்கரவண்டி, மோட்டார் பாரவண்டி, மோட்டார் துவிசக்கர வண்டி, வண்டி, தள்ளு வண்டி, கைவண்டி, துவிசக்கரம், திரிசக்கரம் அல்லாத ஒவ்வொரு வண்டிக்கும் ரூபா 5—00.

துவிசக்கரம் அல்லது திரிசக்கரம், துவிசக்கர வண்டி அல்லது வண்டி, அல்லது திரிசக்கரவண்டி அல்லது வண்டி ஒவ்வொன்றுக்கும்:

| | |
|---|---|
| வியாபாரத்துக்கு உபயோகித்தால் | ரூபா 5 00 |
| வியாபாரமல்லாத காரியங்களுக்கு உபயோகித்தால் | 1 00 |
| ஒவ்வொரு வண்டி | 4 00 |
| ஒவ்வொருதள்ளுவண்டி | 4 00 |
| ஒவ்வொரு கைவண்டி (Jinricksha) | 2 50 |
| ஒவ்வொரு குதிரை அல்லது மட்டக்குதிரை அல்லது கோவேறு கழுதை | 5 00 |
| ஒவ்வொரு எருது அல்லது கழுதை | 1 00 |

ஹட்சன் செல்வராசா
தற்காலிக நகரசங்கக் காரியாதிகாரி
நகரசங்கக் கந்தோர்
யாழ்ப்பாணம்.
25—7—55. M 24 29-7

## யாழ்ப்பாண நகர சங்கம்

### நாய்பதியும் வேதனங்கள் 1956
### நாய் பதியும் சட்டம்
### (334-ம் அத்தியாயம்)

நாய் பதியும் சட்டத்தின் 4-ம் பிரிவு 334-ம் அத்தியாயத்தின்படி 1956 ம் ஆண்டுக்கு யாழ்ப்பாண நகரசங்க எல்லைக்குள் வைத்திருக்கும் ஒவ்வொரு நாய்க்கு ரூபா 2-50 ஒவ்வொரு பெண் நாய்கு ரூபா 3-50 1956-ம் ஆண்டு சித்திரை (ஏப்பிறில்) முதலாம் திகதியில் அல்லது அதற்குமுன்கொடுக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறதென்று யாழ்ப்பாணநகரசங்கத்தால் யாவரும் அறிவிக்கப்படுகின்றனர்

ஹட்சன். செல்வராசா
தற்காலிக நகரசங்கக் காரியாதிகாரி
நகரசங்கக் கந்தோர்,
யாழ்ப்பாணம்.
25 7-55
G. 25. 29 7

## நன்றியறிதல்

பண்டிதர் ம. வே திருஞானசம்பந்தர் அவர்களின் மறைவின்போது, அவரின் இல்லத்திற்கேகி அக்குடும்பத்தாரின் துயரத்திற் பங்கு பற்றியவர்களுக்கும், வர வசதியில்லாது தந்தி, தபால்மூலம் தங்கள் அநுதாபங்களையும் ஆறுதல் மொழிகளையும் தெரிவித்த பல அன்பர்களுக்கும், பண்டிதரின் குடும்பத்தார் தங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றனர்.

## உயர்தரக் கல்வி ஆராய்ச்சிச் சபை

மொழிப் பிணக்கொன்றை வருவித்த உயர்தரக் கல்வி ஆராய்ச்சிச்சபையை அகற்றி விடுவதுபற்றி மந்திரி சபையார் ஆலோசிக்கின்றனராம்.

## சைவப் பிரசங்கம்

நிகழும் ஆனி மாதம் உகூ உ (15-7-55) வெள்ளிக்கிழமை ஆனிக் கார்த்திகை உற்சவத்தின்போது பண்டிதர் சு. இராமசுவாமி அவர்கள் கருங்காலி சுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஆலயம் என்னும்விஷயம் பற்றிச் சிறந்த அறிவுரை ஒன்று நிகழ்த்தினார்கள்.

## பண்டித சம்பந்தர்

[ 2-ம் பக்கத் தொடர்ச்சி ]

தலை குனியச் செய்யும்வரை ஓயமாட்டார். கருத்துவேறுபாடுகள் உள்ளவர்களாக இருந்தாலும் பண்டிதர் தாம் வளர்த்த என்போன்ற எழுத்தாளர்களின் முன்னேறறைக் கண்டு அகமகிழ்வார். திருவள்ளுவர் திருநாட் கூட்டமொன்றில் ஒரே மேடையில் பண்டிதரவர்களும் நானும் பேசும் பாக்கியம் கிடைத்தது. அப்பொழுது அவர் என்னுடைய பேச்சை மெச்சிப்பேசினார். அத்துடன்தான் எப்படி என்னை எழுதத் தூண்டிவிட்டாரென்பதையும் கதையாகக் கூறிமகிழ்ந்தார். அவர் மறைவினால் இலங்கை நல்ல ஒரு தமிழ்ப் பேச்சாளரை இழந்துவிட்டது.

### தமிழ் வளர்ப்போம்!

எமது அன்புக்கும் மரியாதைக்குமுரிய பண்டிதரவர்கள் இன்று எம்மைவிட்டு மறைந்தபோதிலும், அவர் நினைவுத் தொண்டும் எம்மை விட்டு மறையாது. மறைந்த அவரின் பெருமைக்கு எமது அஞ்சலி. அவர் வாழ — தமிழ் வாழ நாம் தமிழுக்குத் தொண்டு செய்தலே பண்டிதரவர்களின் ஞாபகமாக நாம் செய்யக்கூடிய தொண்டாகும். ஏனெனில் தமிழ் ஒன்றுதான் காலத்தையும் அதன் விளைவுகளையும் எதிர்த்து வாழும் ஆற்றல பெற்றது. நாலடியாரையும், திருக்குறளையும், பற்பல நூல்களையும சிறுமாணவரும் தெள்ளிதினுணர்ந்து தமிழ் பயில உரைசெய்த —வழிசெய்த பண்டிதருக்கு நாம் எழுப்பும் நினைவுச் சின்னம் அதுவேயாகும்.

## நல்லூர் கந்தசுவாமிகோயில் உற்சவம்

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் உற்சவம் சென்ற ஞாயிற்றுக்கிழமை கொடியேறித் தொடங்கிவிட்டது. மஞ்சம் முதலிய பெருந் திருவிழாக்கள் நடைபெற்று ஆடி 31ந் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், ஆவணி 1ம் 2ம் திகதிகளாகிய புதன் வியாழக்கிழமைகளில் தீர்த்தம் பூங்காவனம் என்பனவும் நடைபெறும்.

## திருப்பணிக்குச் சிறந்த இன்னிசை விருந்து

பேராற்றல் வாய்ந்த பெரும் புகழ் படைத்த இந்திய சங்கீத ஞானி. சங்கீத கலாநிதி திருக்காட்புரம் சுவாமிநாத பிள்ளை அவர்களின் மாணாக்கர் ஸ்ரீ ஸ்ரீரும்குமாரசுவாமி B A. Diploma in Music) திருக்கேதீச்சரம திருப்பணிக்கு உதவியாக யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் ஆடி 30 உ (30-7-55) சனிக்கிழமை பிற்பகல் 6½ மணிக்கு ஓர் சிறந்த இன்னிசை விருந்தளிப்பாரென்று திருக்கேதீச்சரம் திருப்பணிக் காரியதரிசி அறியததருகின்றார்.

## புதுச்சேரித் தேர்தல்

புதுச்சேரி அரசாங்க சபைக்கு இந்திய தேசிய மகாநாட்டார் இருபதுபேர் தெரிவுசெய்யப்பட்டனர். பொதுவுடைமையாரின் மக்கள் முன்னணியார் 15 பேர் சுயேச்சைவாதிகள் மூவர். முழுத்தொகை முப்பத்தொன்பது.

## உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

### இருவாரப் பலன்கள், 31—7—55 —— 6—8—55

**மேடராசி அசுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

இந்தவாரம் உம்முடைய இனத்தவர்கள் சில துன்பங்களையும் செலவையும் உண்டாக்குவர். புது முயற்சிகள் கவனமாய்க் கையாளப்படவேண்டும். இடமாற்றம் அல்லது சிறுபிரயாணத்துக்கிடமுண்டு.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

பணத்துறையில் நல்ல வாரம். ஆனுல் உமக்கு மனச் சமாதானம் இருக்க மாட்டாது. தேகநிலைமையும் நல்லாயிருக்கமாட்டாது. முதல் மூன்று நாட்களும் எல்லாவற்றிலும் பழுதானவை. வார இறுதி காத்திராத சில இலாபங்களைத் தரும்.

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3**

ஒரு நல்ல வாரம். பண நெருக்கடி குறையவேண்டும். சிறுகாரியங்களால் நிலைதளம்ப வேண்டாம். பெரும் இடைஞ்சலாக நீர் கருதிய ஒன்று சிறு குழப்பமாகி நீங்கிவிடும். உம்முடைய மேலதிகாரிகளிடம் நீர் நன்மதிப்பைப் பெறுவீர். செவ்வாய் பிற்பகல் புதன் வியாழன் கவனமாய்க் கழிக்கவேண்டும்.

**கடகராசி புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.**

இந்தவாரம் மனச் சலனங்களுக்கும பணப் புரட்சிகளுக்கு மிடமுண்டு. தேகசுகமும் நல்லாயிராது. வாரத்தின் கடைசி இரு நாட்களும் நண்பருடன் வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்.

**சிங்கராசி மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.**

இந்தவாரம் உம்முடைய முயற்சிகளில் நல்ல இலாபம் பெறுவீர். ஆனுல் அதிகம் மிச்சம் பண்ணமாட்டீர். எல்லை கடந்து நண்பருக்கு உதவி செய்யப் போகவேண்டாம் அல்லது நீரே இடைஞ்சல்களுக்குள்ளாகக்கூடும்.

**கன்னிராசி உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

இந்தவாரம் தொடக்கம் உம்முடைய பணநெருக்கடியில் அதிகம் நீங்கவேண்டும். இடைஞ்சல்களிலிருந்து நீர் நீங்கக்கூடியதாயிருக்கும். புகழும் சமூகசித்தியும் நிச்சயம்.

**துலாம்சித்திரை 3, 4ம் பாதம். சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்**

இந்தவாரம் உமக்கு அதிக புகழுண்டாகும். ஆனுல் பண நிலைமை சிறிதும நல்லாயிராது. குடும்பக் குழப்பங்களுக்குமிடமுண்டு. ஒன்றையும் புதிதாய்த் தொடங்க வேண்டாம. உள்ள நடைமுறைகளைக் கையாளுக. அப்பொழுது நீர் சித்தியடைவது நிச்சயம்.

**விருட்சிகராசி விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.**

தேகசுகம் நல்லாயிராது. நீர் கூடிய பொறுப்புக்களைச் [illegible] ஆனுல் சிறு காரியங்கள் [illegible] சலனப்படவேண்டாம், வார இறுதியில் பிதாவழி இனத்தவர் உமக்குச் சிறிது கோபத்தை மூட்டுவர்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்**

இந்தவாரம் கந்தோர்த் தொந்தரவு உம்மைச் சிறிது கலைக்கும் நண்பருடன் சில பிழை எண்ணங்களுக் கிடமுண்டு. உமக்குச் சில நட்டங்களுண்டாகக் கூடும் ஒன்றையும் புதியதாய்த் தொடங்க வேண்டாம்.

**மகராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

குடும்பச் சிக்கல்கள் இருந்தபடியே இருக்கும். பணத் துறையில் நல்லவாரம். ஆனுல் நீர் அதிகம் செலவழிப்பீர். பகைவர் அழிவுக்குமிடமுண்டு.

**கும்பராசி அவிட்டம் 3, 4 பாதம, சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.**

இந்தவாரம எதிர்ப்பு நீங்கிவிடும் தனலாபம் நிச்சயம். இழந்தத அல்லது நீர் கைவிட்ட சிலவற்றை நீர் திருப்பிப் பெறக்கூடியதாயிருக்கும். குடும்ப சமாதானம் உமக்குச் சிறிதும இருக்கமாட்டாது.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.**

பணநிலைமைகள் நல்லாயிருக்கும் ஆனுல் சில இனத்தவர் உம்மைச் சிறிது குழப்பக்கூடும். அவர்கள் [illegible] புதினங்களைத் தரும்.

## கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலைப் பரிசளிப்பு விழா

விளையாட்டில் வெற்றி தோல்வி காட்டும் அம்சங்கள் பெரிதன்று. மாணவர் இயல்பாகக்கூடிய ஓர் இலக்ஷியத்துக்காக முயல்வதும இன்ப துன்பத் தாக்கம இன்றி பெறுபேற்றில் கலந்து மகிழ்வதுமே மேலானது என்று 20-7-55 புதன்கிழமை பிற்பகல் நடைபெற்ற ஷெ பாடசாலை விளையாட்டுப் போட்டிக்குத் தலைமை வகித்த வலிகாமம் வடக்கு வட்டார வித்தியாதரிசகர் திரு கே. எஸ். இராசசிங்கம் அவர்கள் பரிசளிப்புவிழாத் தலைமையுரையின்போது குறிப்பிட்டார்.

அன்று இப்பாடசாலை ஸ்தாபகர் திரு. அ. கந்தையா உபாத்தியாயரவர்கள் மறைவுதினமாகையால் முற்பகல் பாடசாலை மண்டபத்தில் அன்னதானம் செய்யப் பெற்றது. பிற்பகல் 3 மணிக்கு பாடசாலைக் கீதத்துடன் திரு. கே. எஸ். இராசசிங்கம் அவர்கள் பாடசாலைக் கொடியை ஏற்றி வைத்தார். கந்தையா இலலம, சுப்பிரமணிய இல்லம், ஆனந்தன இல்லம் என்னும் மூன்று இல்லங்களாக மாணவர் தம்முள் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டனர். விளையாட்டுப் போட்டியில் முதலிடம் பெற்ற ஆனந்தன் இல்லத்துக்கு திரு. வி. தர்மலிங்கம் அவர்களால் உபகரிக்கப்பட்ட விஸ்வநாதன் ஞாபகப் பரிசுக் கிண்ணம் வழங்கப்பட்டது. மேற்பிரிவு மத்தியபிரிவு கீழ்ப்பிரிவு மாணவர்களில் முதன்மையான மாணவர்கட்கு பரிசுக் கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

பரிசளிப்புவைபவத்தில் தலைமை ஆசிரியர் பிரமஸ்ரீ சு. சிவசுப்பிரமணிய ஐயர் அவர்களினுல் 'தமிழ்க் கந்தம' என்னும பாடசாலையின் 1955-ம் வெளியீட்டில் பொறித்த பாடசாலை வளர்ச்சி அறிக்கை வாசிக்கப்பட்டது. புதிதாக ஓர் கட்டடம அமைக்க சொந்தக்காரர் முயற்சி எடுத்து வருவதாகக் குறிப்பிடப்பட்டது. பரிசளிப்பு வைபவத்துக்குச் சமுகமளித்து உதவிய யாவர்க்கும திரு. வி. அப்புத்துரை அவர்களால் நன்றி தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேயர்கள் நெஞ்சம்

ஆசிரியர் அவர்ப,

### சைவ சமயத்தின் ஒளி

உலகில் பல சமயங்கள் உள. அப்படியே பலதொண்டர்களின் ஒளி. சைவசமயப்பரம்பரையான ஒருசிறந்தபணியாளராகிய திருஞானசம்பந்தப்பிள்ளை என்ற ஒளி விரைந்துமறைந்தமை சைவத்திரு நெறியாளர்க்கும் தமிழன்னைக்கும் சகிக்கொணுத துக்கமே! சைவ பரிபாலனசபைக்கு அச்சாணியாகத் திகழ்ந்த அப்போசிரியரின் ஆன்மா சாந்திபெறுவதாக.

வ. மு. இரத்நினேஸ்வர ஐயர்
தமிழ்ப் புலவர்
உடுவில்

### கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

சரவணை நாகமுத்து கந்தையா
இல. 12090
— வழக்காளி
எதிராக
1 சரவணை குமாரு குளந்தைவேலு
2 ஷை செல்லப்பா மகள் நாகேஸ்வரி
3 ஷை விஞசித்தம்பி செல்லப்பா
— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 12090 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப் படும் இரண்டு துண்டுக் காணிகளை 1955 ௵ ஆவணி ௴ 19 உ வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் கின்று பிரசித்த ஏலத்தில் விற்கப் படும்.

#### காணி விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோயிற்பற்று சரவணை இறை உதானும் அலுகன்பிட்டியும் நிலப்பரப்பு ஐந்து (5) ம் கல்வீடும் கிணறும் குசினியும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு திருநாவுக்கரசு பெண் பூமணியும் ஒழுங்கையும் வடக்கு ஒழுங்கை மேற்கு ரோட்டு தெற்கு கார்த்திகேசு பெண் சிவகொழுந்துவும் பங்காளரும திருநாவுககரசு பெண் பூமணியும் இதடங்லும்.

ஷை இறை கெவுளிப்புலம் நெற் பரப்பு (37½) முப்பத்தேழரையும் பனைகள் இலுப்பைகள் கிணறும் எல்லை கிழக்கு திருநாவுக்கரசு பெண் பூமணியும் ஒழுங்கையும் வடக்கு திருநாவுக்கரசு பெண் பூமணியும் முத்துக்குமாரு திருநாவுக்கரசுவும ஒழுங்கை முகப்பும் கணபதி நாகநாதனும், மேற்கு விஞசித்தம்பி செல்லையாவும் நடராசா பெண் சரஸ்வதியும், தெற்கு நடராசா பெண் சரஸ்வதி இதடங்கலும் இதற்குள் இருக்கும் கிணற்றில பிற பங்குகளுக்குரிய தண்ணீர்ப் பங்கும் இறை ஊர்வை வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் புறநீங்கலாகவுரியது.

ஆ. ச. கந்தையா
கொம்மிஷனர்
காரைநகர்
8—7—55.
M 93 29-7 (௹ 50)

### அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கில் இருக்கும் த. பொன்னையாபிள்ளை அவர்கள் கடையில் 12-7-1952 முதல் 30-5-1955 வரைக்கும் அடைவு பிடித்து மீட்கப்படாத தவணை தப்பிய நகைகளை 1955ம் ௵ ஆவணி மாசம் 16 ம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

பொ. இராசரத்தினம்
P. RAJARETNAM
கொம்மிஷனர்.
M 94 29-7-55

### இலங்கை அரசினர் புகையிரதப் பகுதி

—0—

புகையிரதக் கடவைத் திருத்தம்

கப்புத்தளை டியத்தளாவை புகையிரத நிலையங்களுக்கிடையிலுள்ள 153 மைல் 55 சங்கிலியில் அமைக்கப்பட்டுள்ள புகையிரதக்கடவை 7-8-55 மாலை 5 மணி தொடக்கம் மறுநாட் காலை 11 மணி (8-8 55) வரைக்கும் திருத்தப்படும் இக்கடவை 7-8-55 மாலை 8 மணி 30 நிமிடம் தொடக்கம் மறுநாட் காலை (8-8 55) 5 மணி 30 நிமிடம்வரைக்கும் எல்லாப் போககுவரத்து வாகனங்களுக்கும் முழுமையாக மூடப்பட்டிருக்கும்.

G 19 29 7

### ஜாதகம்

ஜாதகம் கணித்து எழுதுவிக்க விரும்புவோர் தபால் மூலம் ரூபா ஒன்றரையும், பிறந்த ஊர், வருஷம். மாதம், தேதி, நேரமுதலியனவும் கீழ்க் காணும் எனது விலாசத்துக்கு அனுப்பவும். கூடிய சீக்கிரம் ஜாதகம் கணித்து உங்களுக்கு அனுப்பலாம்.

அ. சுப்பிரமணியம்
சாஸ்திரியார்.

2/1 றெயில் பாதை
சொலமோன்ஸ் ஒழுங்கை,
கச்சேரியடி, யாழ்ப்பாணம், 16-7-55.
M 88, 22, 29—7—55


## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந் தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேமும் வாங்கலாம்,

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாஞல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.


இந்தியசகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.
Std. 14 20-11-46—20-11-49.


### மதுரைத் தமிழ்ச்சங்கத் தனித்தமிழ்ப் பரீக்ஷை.

(மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் ஜய ௵ பங்குனி ௴ 23, 24, 25, 26 உ [ 1955 ம் ௵ ஏப்ரல் ௴ 5, 6, 7, 8] ஆம தேதிகளில் நடத்திய தனித் தமிழ்ப் பரீக்ஷைகளில் தேறியவர்கள்

பண்டித பரீக்ஷை
2-வது வகுப்பு

A. பெருமாள் வெள்ளாண்டி வலசை இடைப்பாடி, சேலம் ஜில்லா.

S. சாம்பசிவன், 209, நாயக்கர் புதுத்தெரு, மதுரை

அ கி. செலவகணபதி, ஆசிரியர் வடக்கு மாசிவீதி நகரவைப்பள்ளி, மதுரை.

C. ரெங்கநாதன், ஆசிரியர், வரிச்சிக்குடி (Via) காரைக்கால், தஞ்சாவூர்ஜில்லா.

ச கனகசபாபதி ஆசிரியர், ஆறுமுக வித்தியாசாலை, சுழிபுரம் இலங்கை.

செ. சிவப்பிரகாசம், ஆசிரியர், பிரம்படி கொக்குவில் P. O. யாழ்ப்பாணம்

A சிவசுப்பிரமணியபிள்ளை, ஆசிரியர் முத்தாலம்மன்கோவில்தெரு, வடிவீசுவரம், நாகர்கோவில்.

P. முருகேசு ஆசிரியர் பெரிய போரதீவு E. P. சிலோன்

நா. சீனிவாசகன், தமிழச்சங்கக் கலாசாலை, மதுரை,

பிரவேச பரீக்ஷை

S. தாசையா, தமிழாசிரியர், St. Aloysius உயர்நிலைப்பள்ளி, Quilon Travancore State (2-வது வகுப்பு)

### கோட்டு விற்பனவு விளம்பரம்

அனலைதீவு இப்போது வண்ணார் பண்ணை கிழக்கு கணபதி ஐயர் சுப்பையா ஐயர் — வழக்காளி
இல. 9548
எதிராக
1 அனலைதீவு முருகேசு கந்தையாவும் பெண்
2 ஷை தெய்வானைப்பிள்ளையும்
— எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 9548 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைதத கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப் படும் துண்டுக் காணிகளை 1955-ம் ௵ ஆவணி ௴ 24 உ புதன்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுள் நின்று பிரசித்த ஏலத்தில் விறகப்படும்

தீர்வைத்தொகை:—முதல்வட்டி ரூபா 2068 ம இதில் ரூபா 1250 க்கு 20-1 53 திகதி தொடக்கம் 16-11-54 வரைக்கும் வருடமொன்றுக்கு 100 க்கு 12 வீத வட்டியையும் அதன்பின் முழுத்தொகைக்கும் 16 11 54 தொடக்கம் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 322 88

#### காணி விபரம்

1 தீவுப்பகுதி அனலைதீவுக் கோயிற்பற்று அனலைதீவு இறை கொடியன் தோட்டம் நிலப்பரப்பு 8-ம் பயிர்வகைகளும் பனைகள் வடலிகளும் பழைய கிணறும் வீடும் எல்லை கிழக்கு வேலாயுதர் வயித்திலிங்கம் வடக்கு சின்னையா ஐயர் சோமசுந்தர ஐயரும் பிள்ளைகளும் மேற்கு கைமயாழுங்கை தெற்கு வயித்திலிங்கம் மகள் மீனாட்சிமணி

2 அனலைதீவுக் கோவிற் பற்று அனலைதீவு இறை பெருங்கணசீமா நிலப்பரப்பு 10ம தென்னைகளும் புளியமரங்களும் எல்லை கிழக்கு சண்முகம் வேலுப்பிள்ளையும் மறு வடக்கு வேலுப்பிள்ளை அம்பலவாணி மேற்கு கந்தையாவும் பெண் தெய்வானையும் தெறகு சிவம் பெண் சேதுப்பிள்ளை.

ஆ. ச. கந்தையா
கொம்மிஷனர்
காரைநகர்
20—7—55
M 95 29-7

### பட்டினத்தடிகள் குருபூசை

நாள்: மன்மத ௵ ஆடி ௴ ௧௭ உ (2—8—55) செவ்வாய்க்கிழமை,
இடம்: யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நாவலர் மண்டபம்.

நிகழ்ச்சிகள்:

இரவு 6½ — 7 மணி கடவுளாராதனை பட்டினத்தடிகள் பூசை தமிழ்மறை போதல்
திரு V. சுப்பையா அவர்களும் அவரது கோஷ்டியாரும்.
7 — 8 மணி 'பட்டினத்தடிகள்' என்னும் பொருள்பற்றி பிரசங்கம்.
பண்டிதர் வ. மு. இரத்தினேசுவரஐயர் அவர்கள்

சைவாபிமானிகள் யாவரும் சமூகமளிப்பார்களாக.

மு, மயில்வாகனம்

சமயப்பிரசாரஅமைச்சர்
சைவபரிபாலனசபை
யாழ்ப்பாணம், 26-7-55.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் அனலைதீவு தற்போது வண்ணார்பண்ணை கிழக்கு கணபதிஐயர் சுப்பையா —வழக்காளி.
இல. 11660
எதிராக
அனலைதீவு சுப்பையா செல்லையா சைப்பெண் சின்னம்மா தனக்காகவும் காலஞ்சென்ற அனலைதீவு சுப்பையா செல்லையாவின் ஆதனங்களின் பாராபரிப்புக்காரியாகவும்.
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 11660ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப் படும் ஒரு துண்டுக்காணி 1955 ௵ ஆவணி ௴ 13ம் உ சனிக்கிழமை முற்பகல் பத்து மணிதொடககம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 1912/-ம் ரூபா 1500/-க்கு 18-9 54 தொடககம் 28-2-55 வரை 12 வீதமான வட்டியும் அதன்மேல் முழுததொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும கோட்டுச்செலவு ரூபா: 306 – 26 சதமும் — கோட்டுச் செலவில் ரூபா 120/= அறவு பண்ணப்பட்டது.

#### காணிவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி அனலைதீவுக் கோவிற்பற்று அனலைதீவு இறை "நயினகுளம வயலும் நயினகுளமும்" பா. கி இல. 9⅞ ஆனல் ஆட்சிப்படி பா கி. இல 12 குளி 2 அதில் வடமேற்குப் பக்கமாய் நிந்தமாய் விடப்பட்டது நீக்கி மிகுதி பா. கி இல. 7 குளி 2. இதில் மேற்குப் பக்கமாய்ச் சீதனம் கொடுபட்ட பா கி இல 2 நீக்கி மிகுதி பா கி இல 5 குளி 2பனைகள் தென்னைகள் செய்பயிர் வான்பயிர்களும் கிணறும், எல்லை கிழக்கு கணபதி ஐயருக்கும் பெண் இராசம்மாவிற்கும உரிய ஆதனம். வடக்கு வயித்திலிங்கம் மைம்பெண் மீனாட்சிப் பிள்ளைக்குரிய வாதனம். மேற்கு கவகுரு பெண் இராசம்மாவிற்குரிய வாதனம், தெற்கு ரோட்டு.

1955 ௵ ஆடி ௴ 6ம் உ

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்.
M 96 29-7 (௹ 300)

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond residing at 245; Navalar Road Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, of their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Friday July, 29 1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org